## November 29, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி (ஜிடிபி) 2025-26 நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் (ஜூலை-செப்டம் பர்) 8.2 சதவீதத்தை எட்டியுள்ளது. இது கடந்த 6 காலாண்டுகளில் அதிகபட்ச வளர்ச்சியாகும்.
   i. தொழில்துறை சார்ந்த உற்பத்தி அதிகரிப்பு, சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) குறைப்பால் பொருள்களின் நுகர்வு உயர்ந்தது மூலம் இந்த வளர்ச்சி சாத்தியமானதாக பொருளாதார நிபுணர்கள் தெரி வித்துள்ளனர்.
   ii. இது தொடர்பாக தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 2024-25 நிதியாண்டின் முதல் அரையாண்டில் 6.1 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி நிகழ் நிதியாண்டின் முதல் அரையாண்டில் 8 சதவீதமாக அதிகரித்துள்ளது.
2. திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை முதல்வர்மு.க.ஸ்டாலின் வரும் டிச. 20-ஆம் தேதி திறந்து வைக்கிறார் என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.
   i. தமிழகத்தின் 3,200 ஆண்டு கால வரலாற்றை பறைசாற்றும் வகையில், ரூ.56 கோடியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. வரும் டிச. 20-ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அருங்காட்சியகத்தை திறந்துவைக்கிறார்.
3. இந்திய மகளிர் குத்துச்சண்டை அணியின் தலைமைப் பயிற்சியாளராக சான்டியாகோ நீவா நியமிக்கப்பட்டார்.
   i. அவர் ஏற்கெனவே 2017 முதல் 2022 வரை இந்திய ஆடவர் அணியுடன் இணைந்து பணியாற்றியிருக்கிறார். அந்த காலகட்டத்தில் இந்திய வீரர்கள் இது வரை இல்லாத வகையில் அதிகமாக டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றதும், 2019 ஆடவர் உலக சாம்பியன்ஷிப்பில் 2 பதக்கங்கள் வென்றதும் குறிப்பிடத் தக்கது.
   ii. ஸ்வீடனை சேர்ந்த நீவா, சுமார் 20 ஆண்டுகள் சர்வதேச அளவிலான பயிற்சி அனுபவம் உடையவராக இருப்பதுடன், உலக குத்துச்சண்டை அமைப்பிலும் முக்கியப் பொறுப்புகள் வகித்தவராவார். கடைசியாக ஆஸ்திரேலிய குத்துச்சண்டை அமைப்பில் தலைமைப் பயிற்சியாளராகப் பணியாற்றியிருக்கிறார்.
   iii. 2028 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக்கில் ஒன்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களை வெல்லும் அளவுக்கு இந்திய அணியை தயார்படுத்துவதே தனது நோக்கம் என சான்டியாகோ நீவா தெரிவித்திருக்கிறார். அடுத்த ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் என சர்வதேச போட்டிகள் பல நடைபெறவிருக்கும் நிலையில், சான்டியாகோ நீவா பொறுப்பேற்றுள்ளார்.
   iv. நீவாவின் நியமனம் இந்திய மகளிர் குத்துச்சண்டைக்கு உத்வே கத்தை ஏற்படுத்தும் என, இந்திய குத்துச்சண்டை சம்மேளன தலைவர் அஜய் சிங் தெரிவித்திருக்கிரார்.
4. 2030-ஆம் ஆண்டு நடைபெற உள்ள காமன்வெல்த் போட்டிகளை இந்தியா நடத்தும் என்று காமன்வெல்த் போட்டி ஆணையம் கடந்த 26-ஆம் தேதி முறைப்படி அறிவித்தது, இந்தியாவின் விளையாட்டுப் பயணத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.
   i. முக்கிய சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு நம்பகமான மற்றும் விருப்பமான இடங்களில் ஒன்றாக இந்தியா வளர்ந்திருப்பதற்கும். 2036-ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் தனது நீண்டகால இலக்கை நோக்கி நம்பிக்கையுடன் முன்னேறுவதற்கும் கிடைத்துள்ள ஓர் உலகளாவிய அங்கீகாரமாக இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.
5. உலகம் முன்னெப்போதும் இல்லாத வகையில் சவால்களைச் சந்தித்துவரும் தற்போதைய சூழலில், 'வசுதைவ குடும்பகம்' (உலகமே ஒரு குடும்பம்) என்ற நம் நாட்டின் சித்தாந்தம் இன்றைக்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளதாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்தார்.
   i. உத்தர பிரதேச மாநிலத் தலைநகர் லக்னௌவில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் இந்த ஆண்டுக்கான கருத்துருவின் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்று திரௌபதி முர்மு பேசியதாவது:
   ii. இந்தியாவின் புராதன நாகரிகமும் கலாசாரப் பாரம்பரியமும் எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய 'வசுதைவ குடும்பகம்' என்ற சித்தாந்தத்தை எப்போதுமே தனது பண்பாகக்கொண்டுள்ளன. உலகம் முன்னெப்போதும் இல்லாத வகையில் சவால்களைச் சந்தித்து வரும் தற்போதைய சூழலில், இந்தச் சித்தாந்தம் இன்றைக்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது.
6. அடுத்த மூன்று ஆண்டுகளில் செமிகண்டக்டர் ஆய்வகத்தை (எஸ்சிஎல்) மேம்படுத்த ரூ.4,500 கோடி முதலீடு செய்ய மத்திய அரசு திட்டமிட்டு வருவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.
   i. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் தன்னாட்சி அமைப்பாகச் செயல்படும் எஸ்சிஎல் பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் அமைந்துள்ளது.
   ii. எஸ்சிஎல்-இல் செமிகண்டக்டர் உற்பத்தியை 100 மடங்கு அதிகரிக்க வேண்டும். தொழில்நுட்பத்தில் பெரும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.
7. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் உள்பட 50 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்த (எஃப்டிஏ) பேச்சுவார்த்தையை இந்தியா மேற்கொண்டு வருகிறது என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். தில்லியில் நடைபெற்ற இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பின் வருடாந்திர பொதுக் குழுக் கூட்டத்தில் பியூஷ் கோயல் பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது:
   i. தற்காலத்தில் வர்த்தகத்தை ஆயுதம் போல் சில நாடுகள் பயன்படுத்துகின்றன. இந்தச் சூழலில் நம்பிக்கையான கூட்டாளிகளின் முக்கியத்துவத்தை நாம் அனைவரும் அறிவோம்.
   ii. அந்த வகையில் பொருளாதாரத்தை வலுப்படுத்த நம்பகத் தன்மை வாய்ந்த நாடுகளுடன் வர்த்தக உறவை மேம்படுத்த இந்தியா தொடர்ந்து முயற்சித்து வருகிறது.
   iii. அதன்படி பஹ்ரைன், கத்தார், சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் ஆகிய 6 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (ஜிசிசி) உடன் பலகட்ட நிலைகளில்

எஃப்டிஏ பேச்சுவார்த்தை உள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்துடன் ஏற்கெனவே எஃப்டிஏ கையொப்பமான நிலையில்,

iv. ஓமனுடன் ஒப்பந்தத்தை இறுதிசெய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
v. பஹ்ரைன் மற்றும் கத்தார் இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த முனைப்புக்காட்டி வருகிறது.
vi. இது அமெரிக்கா, நியூசிலாந்து, 27 ஐரோப்பிய உறுப்பு நாடுகளைக் கொண்ட யூனியன் மற்றும் 10 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆசியான் அமைப்பு, கொரியா, இஸ்ரேல், கனடா என மொத்தம் 50 நாடுகளுடன் எஃப்டிஏ பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. கனடாவுடன் அடுத்த வாரம் இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கவுள்ளது.
vii. தென் ஆப்பிரிக்கா, நமீபியா, போட்ஸ்வானா, லெசோதோ மற்றும் எஸ்வாட்டினி ஆகிய 5 உறுப்பு நாடுகளைக் கொண்ட தென் ஆப்பிரிக்க சுங்க யூனியன் (எஸ்ஏசியு) மற்றும் பிரேஸில், ஆர்ஜென்டீனா, உருகுவே, பராகுவே உள்ளிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட மெர்கோசர் அமைப்பும் இந்தியாவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்த ஆர்வம் காட்டி வருகின்றன.
viii. இதுதவிர பெலாரஸ், ரஷியா, ஆர்மீனியா, கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய 5 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஆசிய பொருளாதார யூனியனுடன் (இஏஇயு) அண்மையில் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது என்றார்.
ix. ஏற்கெனவே ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், மோரீஷஸ், பிரிட்டன், நான்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டமைப்பான இஃப்டிஏ உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா எஃப்டிஏ மேற்கொண்டுள்ளது.

8. அறிவியல்பூர்வமான ஆலோசனைகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட அமராவதி மாவட்ட வளர்ச்சிக்கு வங்கிகள் நிதியுதவி அளிக்க வேண்டும் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
   i. ஆந்திர தலைநகர் அமராவதியில் ரூ.1,328 கோடி முதலீட்டில் பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ), இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் (எல்ஐசி), தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு) உள்ளிட்ட 15 பொதுத் துறை வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.
   ii. விழாவில் நிர்மலா சீதாராமன் பேசியதாவது: அறிவியல்பூர்வமான ஆலோசனைகளுக்குப்பிறகு அமராவதி மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் தற்போது 15 நிதி நிறுவனங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. எனவே அமராவதி வளர்ச்சியை கருத்தில்கொண்டு நிதி நிறுவனங்கள் நிதியுதவி அளிக்க வேண்டும்.
   iii. விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டைகள் வாயிலாக ரூ.2 லட்சம் கடன் வழங்குவதோடு நிறுத்திக் கொள்ளாமல் மேலும் பல்வேறு சேவைகளை வழங்க வங்கிகள் முன்வர வேண்டும். இந்தியாவில் ஒரு மாநிலத் தலைநகரின் ஒரே வீதியில் முக்கிய பொதுத் துறை வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் அமையவுள்ளது இதுவே முதல்முறை.

9. டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நிவாரண உதவிகளை மேற்கொள்ள ‘ஆபரேஷன் சாகர் பந்து' என்ற முன்னெடுப்பை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
   i. அதன்படி முதல்கட்டமாக ஐஎன்எஸ் விக்ராந்த் மற்றும் ஐஎன்எஸ் உதயகிரி போர்க்கப்பல்களில் நிவாரண பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன. இந்த இரு போர்க்கப்பல்களும் நவ.30-ஆம் தேதி இலங்கை கடற்படையின் 75-ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்க அண்மையில் கொழும்பு துறைமுகத்தைச் சென்றடைந்தன.

10. இஸ்ரேல், அந்நாடு ஆக்கிரமித்துள்ள கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பாலஸ்தீன நிலப்பகுதி தொடர்பான ஐ.நா.வின் சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணையத் தலைவராக ஒடிஸா உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எஸ்.முரளீதர் நியமிக்கப்பட்டுள்ளார்.
   i. இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்னையில் நடைபெற்றுள்ள மனித உரிமை மீறல்களை விசாரித்தல், அதற்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து மனித உரிமை மீறல்களுக்கு அவர்களைப் பொறுப்பேற்க வைத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்தல் ஆகியவை அந்த ஆணையத்தின் நோக்கமாகும்.
   ii. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலால் அமைக்கப்பட்ட அந்த ஆணையத்தில் 3 உறுப்பினர்கள் இடம்பெறுவர்.
   iii. அந்த ஆணையத்தின் தலைவராக பிரேஸில் சட்ட அறிஞர் பாலோ செர்ஜியோ பின்ஹெரோ பொறுப்பு வகித்த நிலையில், தற்போது தலைவராக எஸ்.முரளீதர் நியமிக்கப்பட்டுள்ளார்.